Golden Point Award 2019
Tamil Poetry – First Prize
மிக நீண்டதொரு மீன்தொட்டி *(A Very Long Fish Tank)* and other poems
by சுபா செந்தில்குமார் Subha Senthilkumar

## இருப்பு

கால்கள் விளங்காமல் கிடந்தவளையும்
கருவுற்றிருந்த கறுப்புப் பூனையையும்
வீட்டுக்குள் வைத்துப் பூட்டிவிட்டுத்தான்
இரவுக்காட்சிக்குச் செல்லமுடிகிறது.

வீடு திரும்பும் வரை
நகர இயலாத மனதை
உருட்டிக்கொண்டே இருக்கிறது பூனை.

படுத்தே கிடக்கும் பூனைக்குக்
கேளிக்கைகளில் என்ன
விருப்பம் இருந்துவிடப்போகிறது?

அவள் அப்படித்தான்...
ப்ளாஸ்க்கைத் திறக்கும்போதெல்லாம்
அந்த சனியன் கத்திகிட்டே இருக்கு
அதுக்கும் பாலை ஊத்து என சலித்துக்கொள்வாள்
பூனை இல்லாத நாட்களிலும்.

Golden Point Award 2019
Tamil Poetry – First Prize
மிக நீண்டதொரு மீன்தொட்டி *(A Very Long Fish Tank)* and other poems
by சுபா செந்தில்குமார் Subha Senthilkumar

முழுநீளத்திரைப்படம் முடிந்த மறுநாள்
தலைமாட்டில் வைக்கப்பட்ட பாலுடன்
சுருண்ட பூனை போல்
சலனமற்றுக் கிடத்தப்பட்டிருக்கிறாள்.

இதுவரை திரும்பவே இல்லை
சப்தங்களை வீட்டுக்குள் பதுக்கிவிட்டு
கதவு திறந்ததும்
அரவமற்று வெளியேறிய பூனை.

கால்களில் குழைந்தபடி சுற்றும் ப்ளாஸ்க்கில்
இனி யாரை ஊற்றி நிரப்புவது?